572

OFFICE OF THE REG...
6 - FEB ...
MADRAS

ஓம்

தத்ஸத்

தேவாரநகரம்

சுத்த அத்வைதி அருட்கவி

ஸ்ரீ விலக்ஷணாநந்த ஸ்வாமிகள்

அருளிச்செய்த

சுவாநுபவக்கண்ணிகள்

இருநூறு

இஃது

ஓர் சாதுவால்

திருச்சி
நடராஜா அச்சுக்கூடத்தில்
...ப்பிக்கப்பட்டது.

1918

R6
N18
17946

FEB 1918
MADRAS

ஓம்

தத்ஸத்

தேவார நகரம்

சுத்த அத்வைதி அருட்கவி

ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகள்

அருளிச்செய்த

சுவானுபவக்கண்ணிகள்

இருநூறு

—:—

இஃது

ஓர் சாதுவால்

திருச்சி
நடராஜா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
1918

179416

ஓம்

முகவுரை.

முமுக்ஷுக்களே! தேவாரநகரம், சுத்த அத்வைதி, அருட்கவி ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகள் ஒவ்வொரு சமயந்தோறும் தன்னுடைய அனுபவத்தைக் கண்ணிகள் வடிவமாக அருளியுள்ளார். அஃது இதுகாறும் சுமார் பதினாயிரம் வரை ஆகிறது. அவற்றில் இருநூறுகண்ணிகள் இப்போது வெளிவந்திருக்கிறது மற்றைய கண்ணிகளும் முறையே வெளியாம்.

இங்ஙனம்,

சிவானந்தம்.

ஓம்

தத்ஸத்.

(சுவானுபவக் கண்ணிகள்.)

வெட்டவெளிகண்டவனை வெட்டவெளியாகுவனை
வெட்டவெளிநாரணனை வேண்டிவிளம்பிடுவோம் 1

மான்குயிலுந்தேன்குயிலு மாறிப்பலபேசி
யேன்குயிலுகின்றாரென் றேன்குயிலுகின்றாரே 2

சிம்பளத்தின்சாரிறக்கி நின்றேயுளவறியா
வம்பளக்குமாந்தரிடை வந்தபடிவந்தேனே 3

மாங்காய்பழுத்துதிர்ந்தால் மாட்டேனெடுக்கவதைத்
தேங்காய்விழுந்தாலுந் தென்னைமரந்தேடாதே 4

ஞானமுடிவதனை நாம்பேசிநந்தமக்கே
மோனமுடிந்ததெனை முந்துநிலைகூடாதே 5

வாதுக்குநில்லாதே வந்தவழிமாத்திரமே
சாதித்தடைவதுவே சாந்தஞ்சரியாமே 6

கால்கட்டுகைக்கட்டு காணுமனக்கட்டு
மேல்கட்டுமேலெல்லா மெல்லக்கழன்றனவே 7

எட்டாப்பிரமமதை யெட்டியெட்டிஎட்டாமல்
முட்டாள்தனம்போனேன் முன்னேயிதுகாணேன் 8

ஆரிடத்துச்சென்றாலு மாகமடங்குமுறை
நேரிடத்திற்சொல்வதிலை நேரேயென்னம்பரமே 9

தெப்பக்குளத்தருகே தேரோடும்வீதியிலே
முப்பழமுஞ்சர்க்கரையு மூதாவளித்தனரே 10

ஒருநாளிருந்திடத்தி லோடிவருமென்னிடமே
திருநாளுறவாக்கே தேடாதொழிந்தனனே 11

மூவர்தமிழ்முறையு முன்னவர்கள்மூதறிவு
மேவரெடுத்துரைப்பா ரென்னாலுரைப்பதுவோ 12

ஆழ்வார்பெரியாழ்வா ரானநூதனம்மாழ்வா
ரூழ்வாய்கடந்தநிலை யுற்றாருறவாலே 13

பொய்கையார்பூதத்தார் பேயார்போலாரிருந்தா
ருய்வானளித்ததிரு வாய்மொழியுமுற்றாரே 14

ஆலமரத்தினிடை யானபரவென்னாசா
னோலமிடுமென்னோருக் குற்றநிலையுன்னோமே 15

கண்ணப்பர்போலெனக்குக் கண்டதறுநாளாலே
யுண்ணப்பயனிலையோ வூழோவிதுமுளவோ 16

மனத்தாலுறுபூசை மாட்டேனோபூசலைப்போ
வினத்தன்றிருக்கின்ற வென்னையுறவேற்பாயே 17

வேதாவிதித்தவிதி வேண்டேனினிவேண்டே
னாதாவுனதருளை நாடிநடக்கையிலே 18

வாழைமரம்போலே வந்தமிகும்பக்குவரை
யேழையெனவிட்டுவிட்டா லெப்படியாளாக்குவதே 19

சாத்திரமுங்கொள்ளாமற் சாதிமுறைபாராது
கோத்திரமுங்கூடாமற் கொண்டநிலைகொள்ளேனோ 20

மடமைபெரிதாக வந்தவருமென்னிடமே
மடஞ்செய்ததிலிருந்தி வந்திருக்கவொன்றுரே 21

நம்மனதுமெப்படியோ நாட்டார்மனமஃதே
செம்மையுறவாகவதுஞ் சேர்ந்தேன்செறிவாலே 22

பண்கள்படித்தலுத்துப் பாராதெனைப்பாராப்
பெண்கள்மயக்கமெலாம் பேணுமனின்றனனே 23

ஆகாரத்தாற்குணங்க ளாகுமிதுநிசமாஞ்
சாகாமனஞ்சாகச் சத்துவமுஞ்சாருவனே 24

எப்போதுலகநசை யெல்லாமறவிட்டு
வப்பாவெனவலற வம்மாவருவாளே 25

வாதாடிவாதாடி வந்தநிலைபோதுமடி
நீதாடியென்றனக்கு நின்றநிதியோகமடி 26

செத்தார்பிழைத்தாலுஞ் சேதனமோசேரேனு
னெத்தாலதுவாகு மென்றுலியம்புவனே 27

ஓடைகிழக்காக வுற்றதலைமேற்காக
வாடைவடக்காக வந்தாய்மனோன்மணியே 28

நாலடுக்குமெத்தையிலே நாலாறுபேய்களுறக்
கோலமுடனென்னையுமே கொண்டாய்மனோன்மணியே 29

ஆசைவிடவில்லையே யம்மாவெனக்குமினிப்
பாசமறுக்கும்வழி பண்ணாய்மனோன்மணியே 30

ஆதாரங்கண்டோரு மாதாரங்காணாரென்
றோதாதுணர்ந்திரும்ப துண்டோமனோன்மணியே 31

என்னேகருமமிது வெத்தனைநாளித்தாலம்
தன்னேசுமத்திருக்கத் தானோமனோன்மணியே 32

சொன்னார்பலமுனிவர் சொற்கடந்தசூத்திரத்தை
யென்னோருணர்ந்தார்க ளென்னேமனோன்மணியே 33

பாசவிடயமெலாம் பற்றற்றேன்பண்டானே
நேசநிருவிகற்ப நித்திரையினாயகனே 34

தீர்த்தமுறையாடிச் சென்றேன்பலதேச
மூர்த்திமிகக்கண்டேன் முட்டாட்டலைதனிலே 35

பஞ்சபக்ஷிகொக்கோகம் பாராச்சரநெறியு
மஞ்சுவிதமென்பார்க ளாகாதப்யாசியர்க்கே 36

வேதநெறிவேண்டேன் விண்ணவர்கள்பேர்வேண்டே
னோதுமுறைவேண்டே னுண்மைநெறியீதாமே 37

எல்லாமதங்கடந்த வென்றன்க்குமென்னமத
மல்லாமதமாகு மத்துவிதமாகாதே 38

ஆதியரன்வேண்டே னத்துவிதம்வேண்டேனா
னீதிமுறைவேண்டே னித்தியமும்வேண்டேனே 39

காலங்கலிகாலங் கண்டநிலைகாணாரோ
வாலமரவம்மானா ராற்றுநிலையாவேனே 40

வாதிவழக்கிருக்க வற்றுப்பரமநிலை
சோதியுடனிருக்கச் சொல்லுவதுமாரோடீ 41

நனவிற்சுழுத்திநிலை நாடேனெனினானே
கனவிற்கதைகேட்டகாரணமுங்கண்டேனே 42

தன்கதவைத்தான்மூடித் தானாகின்றாலு
மென்கதவுமெப்படியோ வீசாவியற்பரனே 43

நல்லார்களாசையினா னானுமலுத்தலுத்து
மெல்லாம்பறிகொடுத்து வேகிடவுநாளாச்சே 44

பாதாதிகேசவரை பார்த்துப்பரதவித்துக்
கேதாரநாகரிகங் கெட்டிடவுநாளாச்சே 45

அத்துவிதஞானநெறி யாகாதுமாந்தர்களுக்
கித்துவிதசைவநெறி யெல்லாமினிதாமே 46

தாய்காணாப்பிள்ளை தவித்தலைந்ததன்மையென
நாய்போலலைந்தலுத்து நற்றவங்கொண்டாடினனே 47

கேரளத்திற்கேடில்லாக் கேடானமாணிடரே
யாரளக்குமத்துவித ராவார்பலசீடர் 48

உலகநசையறுத்து முண்ணோடி நின்றவரே
யலமதறுமர்தமதி யத்துவிதவதிகாரர் 49

வீதிவழிபோகையிலே விண்ணிறங்கியோர்மாது
சாதிமுறைபேதமெலாஞ் சாராதென்றோதினளே 50

தேவாரம்பூத்துத் திகழ்கின்றவென்றனக்குத்
தேவாரமோர்நகரந் தேரேனென்றேவிட்டேரே 51

ஏழுமலையேறி யிறங்கியதுமென்னாலோ
வேழுமலையானேனே வென்றனுக்குமாகாதோ 52

அடங்காப்பிடாரியென வானாலறைத்திடுவே
னுடன்காக்கவென்றனையு முன்னேழுமலையாளே 53

பற்றுமனதானாற் பலசென்மந்தான்றெரியு
முற்றுமுடிவுறவே முன்னேனென் முன்னவனே 54

பலபலவாஞ்சென்மநெறி பார்த்தேன்பயமடைந்தே
னுலகநெறியுற்றாலு முந்றேனெனவெண்ணேன் 55

கைவல்யவேதமறை கண்ணினருங்காணாத
கைவல்யமுத்தியதைக் காட்டாய்கதியாளே 56

தன்னிடத்திலுண்டாகுந் தன்னினைவேவேநாந்த
மென்னினைவுமற்றவிட மெல்லாம்வெளியாமே 57

நானிருக்குங்கேரளமே நாட்டாரறியாரோ
கோனிருக்குங்குன்றமறி குன்றமிலையென்பேனோ 58

தென்மதுரைநல்வளமுந் தேவாரத்துள்ளவரு
மென்மனதுநின்றநிலை யெல்லாமுங்கற்பனையே 59

மாதாவிருக்கும்வரை மாற்றவிலைநாடெல்லா
மாதாவின்காலமற வந்தேன்றுறவுகொள 60

ஒருவஸ்திரமிருந்தா லுண்டாம்பலதுன்ப
மருவத்தையாக்குமவர்க் கியாதொன்றுமாகாதே 61

காலவிவகாரங் காணேனென்கண்ணாலே
யோலைபடித்தவரு முண்டானாலென்னாமே 62

பாம்பொருநாளென்னோடே படுத்திருந்தபார்த்தேனா
நாம்படுத்தபின்னாலே நடந்ததுவுநானாமே 63

சமணரிடையிருந்து சமர்த்தறிவானுமிக
வமலபரிசுத்தநிலை யாக்குமதமீதாமே 64

சரவசரசாதியெலாஞ் சார்ந்தேன்பலசென்ம
மரவமதாயபானேனு ஞலமராமானேனே 65

பூங்கிளியும்புன்னைமரம் புல்லாய்ப்பலசென்ம
மாங்கனியுமற்றுமுள மரக்காகமானேனே 66

சமாதியிருந்தவுடன் சந்தேமனக்குதித்துச்
சமாதிமனத்துள்ளாலே சார்ந்தபலசென்மமெலாம் 67

கரும்பிருக்குங்கற்கண்டு காணேனெனிலதுவா
மெரும்புபலவிதமா மென்றெடுத்ததின்றேடே 68

பயிலும்பலசென்மம் பறவைகளாயானேனுன்
குயிலும்பலவானேன் குக்குடமுமானேனே 69

குன்றுமரம்வாவி குன்றிலுறைகுன்றர்களு
மென்றுமகவாவானே னென்குணனுமானேனே 70

அருந்தும்ரவானே னுதாரமானேனு
னிருந்துமிறவாத விப்பாருமானேனே 71

விந்தையிதுவென்ன விந்தியத்தின்மேற்காக
விந்தவிதமான விண்ணவனுமானேனே 72

ஆதிபராசத்தியிடை யன்றுமுதலின்றுவரை
யேதுபிறந்தலுத்தோ மென்றெண்ணிப்பாரோமே 73

கருமம்வெளிச்செயலாங் காகூியுறுங்கண்ணுளே
யருவமனத்தெளிவே யந்தமிகுஞானமிதே 74

சாந்தியெனுமாதைத் தழுவித்தழுவியொரு
வேந்தருழந்தையுற வென்னபயனுற்றேனே 75

பாசங்கழன்றதெனப் பார்த்தேனதுவுமில்லை
நேசவுடலில்லையென நின்றேனிருவிகற்பம் 76

சந்யாசம்பெற்றாலுஞ் சகசநிலைசாராது
அன்னியாயமாகவிதை யாற்றேனதிதமிதே 77

தன்மனோவிருத்தியெலாந் தானாகத்தானடக்கித்
தன்னையறிவதென்றன் தன்மைபராபரியே 78

மனதைமனத்தாலே மாற்றிமதியானா
லுனதுபதங்கிடைக்கு மென்பாருயர்ந்தோரே 79

எவ்வளவோசாத்திரங்க ளெடுத்துப்படித்தாலு
மவ்வளவுமந்தநிலைக் காகாதுகண்டேனே 80

கீதையெலாந்தான்படித்துங் கிட்டாதவிந்தநிலை
பாதையிலேபோனாலும் பாரார்பதிநிலையே 81

சங்கற்பமற்றவிடஞ் சத்தென்ரைத்தாலு
மிங்கற்பமில்லாத வென்னையுறவாக்கியதே 82

பற்றற்றிருந்தாலும் பார்வையெலாமஞ்ஞான
முற்றிருந்தாலங்கே யுயர்ந்ததமமாமே 83

பற்றாதிருந்தாலும் பார்வையெலாஞானத்தி
லற்றிருக்குமாயி னங்கேயுயர்குணமே 84

ஒன்றிலுமேசெல்லாம லோடாதுயரகமு
மன்றுமதுதமமா மாகுமிதுமாதரவே 85

என்னையுபதேச மெப்படியோவென்றாலு
மென்னையிழுக்கின்றா ரென்னவதிசயமோ 86

ஆயிரக்கணக்கான வந்தமுறுஞ்சீடர்களே
யாயிருக்கவென் றனுக்கு மாகவருளாயே 87

மந்திரங்களெல்லாமு மாருநிலையருளா
தந்திரத்தாலாகாது தன்னாலுமாகாதே 88

உல்லாசமேடையிலே வுட்கார்ந்திருக்குமெனை
யல்லாமதக்கார ரந்தநிதிகேட்டாரே. 89

ஆனிவருமந்நாளி லாடிவருமென்பாரோ
நானிடமுநீயிடமு நன்றாயறிந்தேனே 90

சாதியிலைபேதமிலை சாற்றுஞ்சகமுமிலை
யேதுமிலையென்றாலே யென்றதுவுமில்லையதே 91

எண்ணமிலையுண்பதிலை யெல்லாவகமுமிலை
நண்ணுபலநாட்களிலை நாமமிலைநன்றாமே 92

அங்கமிலைவேதமிலை யாதாரமில்லையென
வெங்கும்பறையறையு மெண்ணமெனக்கில்லையதே 93

சைவமிலையோகமிலை சாந்தமதமுமிலை
யைவர்மதங்களிலை யத்துவிதமில்லையதே 94

வாதுக்குழைத்தேண்டி வந்தவழிபாரேண்டி
யேதுக்கிதுவெல்லா மென்றபடியெண்ணேண்டி 95

காதவழியோடிநிதங் கண்டநிலைபோதுமடி
சாதமிலையென்றாலுஞ் சத்தநிலைபோகாதே. 96

பற்றோடிருப்பவரைப் பார்த்தாலுமேமாட்டாதே
பற்றாதவரிடமும் பாதம்பணியாதே் 97

இல்லாளை வேண்டாதே யில்லம் பயிலாதே
சொல்லாத வார்த்தைகளைச் சொல்லாதொழியாதே 98

வேதம் பயிலாதே விண்ணவருக்கோடாதே
கீதங்குயிலாகக் கின்னரமும் பாடாதே 99

சொற்புத்தி கேளாதே சொன்னாலறியாதே
துற்புத்தி கொள்ளாதே தூர்த்தருடன் கூடாதே 100

ஆடாதே யெங்கெங்கு மத்துவிதம் பாடாதே
தேடாதே நின்றாலுந் தேடாத தன்மையதே 101

உள்ளம் பயிலாதே வுத்தமரைக்கெல்லாதே
சள்ளை சருவாதே சத்தி நிலை பொல்லாதே 102

பெண்களிடை போகாதே போனாற் பழகாதே
கண்களிக்கக் கண்டாலுங் காணாதே காணாதே 103

மக்களுறவாகாதே மாற்றாருறவாஃதே
யிக்கணமே யெண்ணாதே யேகாந்த மெண்ணுவையே 104

சாதிமுறை சாராதே சாந்தம்பழகாதே
ஆதியரனாகாம லாட்டிப்பலகாலம் 105

வந்த தெலாம் வந்ததென மனத்தாலனுபவித்துச்
சிந்தை மகிழ்ந்து நிதஞ் சித்தாகவாகுவனே 106

ஒருகால் மகிழ்ந்திருப்பே னொருகாலயர்ந்திருப்பே
னொருகாலுயர்ந்திருப்பே னொருகாலொன்றில்லேனே 107

தானாகக் கண்ட நிலை தன்னாற் சொலலாமோ
வேனோமுடியாதென் றெல்லாமியம்பினரே 108

179416
சென்னை-600 00

தேசம்பலசுற்றித் தேர்ந்தாலுந்தேவுவினை
யாசையறநீக்கி யறிந்தாலறிவாரே 109

சைவ சமயநிலை சார்ந்தாலது போது
மெய் கண்ட தேசிகனை மெய்யாயுளனே 110

கும்ப முனி கொண்ட முறை கொண்டாற் குடி கேடாம்
வம்பு விளையு மென வண்ணரைழந்துள்ளாரே 111

ஆறு சமய நெறி யானாலுங் குற்றமிலை
நீறு நிலமதமு நித்தியமு மாகாதே 112

பொய்யாம் புலியாலே பொய்யில்லா மெய்யாகும்
பொய்யா மறிவாலே பொய்யில்லா மெய்யாமே 113

புத்தமதமிகவே புத்தியுளதேன்றேனு
னுத்தி மிகவானாலு முண்ணிலையை யுள்ளாரே 114

நம்பனிடமருளு மாதாக்க ளெல்லாருஞ்
செம்ப நிருவிகற்பஞ் சேர்ந்தாரெனக்கிலையே 115

நேற்றுமன நிலைமை நித்தியமாயாகாதோ
சோற்றுச் சுமை தூக்கிச் சுற்றி வரச்செய்தாயே 116

அன்பாரு மப்பாவென் னந்தரங்கவையாவே
யென்பாலுனக்கருளு மில்லை யெனிலென்னுமே 117

நாகசர்ப்பங் கண்டாலு நானிற்கே னென்ற மன
மேக நிலைபெற்றபினு மென்னவிது குண்டலியே 118

அப்யாச யோகிகளுக் காததொன்றுமிலை
யெப்போ பசியாமோ வப்போதவைதை யுண்பார் 119

இன்னதுதா னீந்திடுத லென்னுமகன் கூடாது
வென்னுநிலங் கூடாது வியனிலையுங்கூடாதே 120

மனத்தின் சொரூபமதை மாற்றாறிவாரோ
வினத்துடனே சேர்ந்தாலு மின்பநிலை கூடாதே 121

வேண்டேன் மன நிலைமை வேண்டேனுலக நிலை
யாண்டேயருளுவது மாரெக்கு மாவாரே 122

அத்துவித வானந்தம் மாகமத்துக் கெட்டாதா
மித்துவித மெட்டுமென வெண்ணம் பலவாறே 123

அட்டாக்கரமனத்து மகத்திருத்தியாக்கிடினு
மெட்டாப்பரமனடி யெட்டுவது மென்றனக்கே 124

பஞ்சாக்கர நெறியைப் பாசவெழுத்தாக்காது
நஞ்சாமது தள்ளி நல்லநெறியாவேனே 125

எல்லாமொழிக்தவருக் காகுமிது வென்றாலு
மெல்லாமறிபவருக் கில்லை பலனென்றுமிதே 126

மேல்வீடு மேலேறி வந்தேன் வழியில்லை
நால்வேத சாரமெலா நன்று மிதுதானே 127

பந்துவினை யாடுவதும் பார்ப்பே னெறிகொள்வே
னிந்துமத மென்பாரை யென்னே னிதுவெண்ணேன் 128

மாடியிலே யேறிடுவேன் மந்தை படுத்திடுவே
னோடிவிளை யாடிடுவே னுன்மை நிலையாவேனே 129

உருட்டி முழுத்துருத்து மொன்றுயக மடக்கித்
திரட்டியுற நின்றாலுந் தேரார் திறமிதே 130

வாசிட்டமென்றால் வருமோ வருவதுவோ
நீசிட்டமாணாக்கா னிறையு நிறைவாலே 131

இன்றிருந்து கவி யெழுது மெண்ணமெலாமற்றேனா
னன்றாமிதுவென்ன நாட்டமிது நாட்டாயோ 132

என்னசெயல் செய்தாலு மென்னவெனக்கென்னா
வன்னவரையானொவ்வே னத்துவிதமாகாதே 133

மனது சலிக்கும் வரை மாட்டேன் விட மாட்டே
னுனது தயவிருக்க வுண்ணிலையு முள்ளேனோ 134

அருவனந்தமாகுமென வாகாதிதுவென்றே
திருவனந்தபுரத்துறையுந் தேவே யென்றேட்டமிதே 135

அண்டமுடிவேறிராது வானோர்களென்றுமறை
யுண்டபெரியோர்க ளுற்றாரறியாயோ 136

வாக்குமுகமனமும் வந்த வழிசத்துவமே
தாக்குமிதுதந்தாற் றன்னையறிபவரே 137

முன்னாளுளபெரியோர் மூதாக்க ளென்றாலு
மின்னாளுலக நிலை யெல்லாமினிதாமே 138

மாண்டார் பல கோடி மானுடருங்காணாம
லேண்டாவிதை யெடுத்தோ மென்றாரினியோரே 139

சும்மாவிருக்கு நிலை சுற்றிப் பிடிக்கவெனை
யம்மா கவியறிவு மாகாது மாகாதே 140

ஆணிப்பொன் முத்தா லாகாத வந்தமறு
மாணிக்க வாசகனை மனதா லறிவேனே 141

இப்புவியி லேகாந்த மெய்தியதோ ரின்பர்களி
லப்பரடி யினையை யப்புவது மென்னுலோ 142

பற்றுவைத்தாற் பாழாகும் பண்டிதனு யானுலும்
அற்றநிலை யுட்கிடையா தாவதினி யாவதுவோ 143

பெரிய மனிதனெனப் பேரெடுத்து வந்தாலு
மரிய பிரமநிலை யறியா ரதுநிசமே 144

அண்டையிலே யானபடி யாகின்ற வத்துவிதங்
கண்ட முனிவரிலை கால மிதுவரையே 145

காயகற்பமுண்டு விட்ட காலமெல்லாங் காணேனு
னேயநிரு விகற்ப னின்றே னினதருளே 146

ஆதி பரமகுரு வானுலு மென்றனக்கு
நீதி யுரைத்தவரே நிச்சயமென் றெண்ணினனே 147

ஆன்மாவொருவ னென வானுலு மிப்பொழுது
தான்தானென வெண்ணித் தளருவது தன்மையிதே 148

எல்லா மனிதருமே யேகாந்தஞ் சேருவர்க
ளெல்லாஞ் சரமசர மெல்லா மொருகாலம் 149

நிருவிகற்ப முற்றாலு நித்தியரைக் காணரே
யருவமுட னற்றாலு மத்துவித மாகாதே 150

நிற்குணத்தி னிற்கவெளி னிற்க முதற்சகுண
மற்கடமா மத்தாலே மாறா திருக்கவுமே 151

பேச்சின்பமுள்ளவர்க்குப் பேசாதவின்பமிலை
பேச்சடக்கிப்பேச்சற்ற பிரமநிலைபேறுமே 152

இப்புவியினாசையுளோர்க் கெக்காலுமில்லைஞானஞ்
சொப்பனத்துமில்லையெனச் சொல்வாஞ்சுகமாக 153

பெண்களையேதாஷித்துப் பேரெடுத்தார்முன்னோர்க
ளெண்ணமவரிடமே யேகியதற்கவரென்னோ 154

மாதரினால் மானுடரை மானிலத்தின்மாற்றவில்லை
யேதுமனதுள்ளோட வென்செய்வாரன்னோரே 155

அன்னநடையன்னார்க ளழகென்றுமோடுமென
மென்னவவராலே யேதொன்றுங்காணோமே 156

நம்மனதுமாதரிட நாளுஞ்செலவானா
லம்மவவராலேயென் னானகுறையம்மாவே 157

நல்லாரிடங்குற்ற நாளினுமேயில்லையென
வெல்லாவிதநூலு மியம்பவில்லையென்னேயோ 158

மாந்தர்மனமோட மாதர்களுமென்செய்வா
ரேந்துமனமடக்கி யிருந்தாலதுவாமே 159

ஆனாலுமாதரொரு வங்கமெனவானாலு
நானாரென்றெண்ணுநெறி நட்டார்க்கில்லையதுவே 160

சோதரியாய்க்கண்டவரைச் சொன்னாலகமோடா
வாதலினாலதைச்சொல்லி யாக்குவதுமத்திமமே 161

ஏகாந்தமற்றநிலை யென்றனுக்குமீவாயோ
சாகாவரம்வேண்டேன் சாகாததத்துவனே 162

ஆதண்டைதின்றேனா னப்புறமுங்காட்டமிகு
மூதண்டைமுன்னோரு மூற்றுறவுண்டேனே 163

பற்பல்விதமான பாக்கியரைக்கண்டேனா
னுற்பவமுமாறவிலை யுன்னேனுறுதியிதே 164

பரதேசியானாலும் பக்குவர்க்கேபரங்கிடைக்குந்
தரமுடனேசென்றாலுந் தன்னிலைமைகூடாதே 165

ஆரங்கவேதமெலா மத்தியனஞ்செய்தாலுஞ்
சிரங்கநாதாவுன் சேவடியைக்காணாரே 166

எனக்குமுதலிருந்து மின்றுவரையேகாந்த
மனத்தையளித்தகுரு மற்றெனக்குநீயன்றோ 167

அறியாதமாந்தருக்கு மறிவுவரவாலயந்தா
னெறியாகுமிதுநிசமே நேமநிலையீதாமே 168

தாமிசங்கள்செய்யாமற் றன்னிடத்தினாகுவரை
மாமிசங்களுண்ணாமல் மாற்றுவதுமென்மதியே 169

அத்துவிதநூல்படித்து மறிவுகெடவானார்க
ளித்துவிதசைவநெறி யென்றனுக்குமுண்மையதே 170

வீணாகவேதாந்தம் வேணபடிநாம்பேசி
நாணாமற்பாபமதை நாட்டாரியற்றினரே 171

ஆறுசமயமெலா மாய்ந்தபினேயத்துவித
மேறவரமளிப்பா ரீசன்றனுள்ளாலே 172

அன்பாகப்பேசுவர்க ளாகமமுமாற்றுவர்கள்
தின்பார்புலாலைநிதந் தேவனுக்குள்ளாகாரே 173

தன்றூலந்தான்பெருக்கத் தான்தின்பார்மாமிசத்தை
யென்னோவவரையெலா மீசன்படைத்தானே 174

தோலைப்பெரிதென்று தோற்றினுமானுட்ரை
காலைப்பிடித்திழுத்து கத்திடவுஞ்செய்வேனே 175

வீடுபுகவெண்ணாமல் வேறுநினைவுற்றுமிகும்
பாடுபட்டுமாமிசத்தைத் தின்பார்பதிவாலே 176

ஐயோபுலாலைநீத மாச்சரியமாகவுண்டு
மெய்யேயிழக்கின்றார் மேதினியினுள்ளோரே 177

எல்லாருந்தன்போல வெக்காலங்காண்பதுவோ
சொல்லாலுங்காணாத சொற்பொருளேசொல்லாய்நீ 178

பாம்பாட்டிப்பாம்பாட்டிப் பற்றற்றிருக்குமெனை
யேம்பாட்டிருக்கின்றே னென்னேரினுற்றாயே 179

பட்டியெருமையெனப் பற்றாதொருபொருளை
யெட்டியறியவெனக் கென்னறிவையீயாயோ 180

எல்லாமுதறிவிட்டு மெம்மானேயென்றலறிக்
கல்லாமனங்கழலக் கண்டாற்கனிவாமே 181

ஆசாரசீலரிட மன்றோவமருவது
காசாபணமாமா கண்டவருக்காகாதே 182

பெரியோரிடையிருந்து பேசிப்பழகாம
லரிதானவிச்செனன மாங்கேகழன்றனவே 183

காசிக்கடன்கழிக்கக் கண்டாலுங்காற்றடக்கி
வாசிபிடித்திழுத்து வந்தேன்வழியாளே 184

இருந்தபடிநானிருக்க வென்றைக்கருளுவையோ
யிருந்திடமுந்தன்னிடமே யென்னாலறியேனே 185

மனதைச்சுழுமுனையில் மாற்றிமறந்திருக்கக்
கனவுபலவாகவுறக் கண்டார்ககனமதே 186

பல்வேலிகொண்டாரும் பாரார்பரந்ததிரு
நெல்வேலியுற்றபர னேத்திரனைக்கண்டேனே 187

அந்தூரடிக்கமல மானபடியத்துவிதச்
செந்தூர்முருகனடி சேருந்திரமின்றே 188

என்பாலெனக்கன்பு மில்லையெனவென்றாலு
முன்பாலுனக்கடிமை யுன்னுவதுமுண்டாமோ 189

அறுத்துமலமதனை யன்றிருந்துமின்றுவரை
எறுத்துமனமடக்கி யீச்சுரனைக்காண்பேனோ 190

ஆங்காரப்பேய்களெலா மற்றாலறிவுண்டா
மீங்காரெனக்குரைப்பா ரென்னேயோவென்னீசா 191

வரம்புகடந்தவரை வாவென்றழைத்தாலுங்
குரம்பைகுறியாகக் கொள்ளார்குடும்பமதில் 192

விளக்கெடுத்துப்பார்த்தாலும் வேதநிலைதோணாது
விளக்கியகமதனை விண்டால்விளங்குவதே 193

இப்போதுநுநிலைமை யெப்போதுமானாக்கா
லிப்பாரிடையிடையே யெண்ணேனிதுநிசமே 194

சாதிமுறைபேதமெலாஞ் சாராமனின்றேனோ
வாதிசனகனிலை யானடைவதென்னாளோ 195

ஆலயங்களார்பூசை யத்துவிதபூசையதோ
பாலமிகத்தான்றாண்டிப் பண்டைநிலையாவார்க்கே 196

சாதிசமயமுறை சாரேனுன்சார்ந்தாலு
மாதிபரமகுரு வானநிலையாவேனே 197

பத்தாமிடம்பாவர் பார்த்திருக்கப்பாராத
கத்தாகுருவைவந்திற் கண்டாற்கதியாமே 198

ஒவ்வொருநாளொவ்வொன்று யொவ்வோரனுபவமே
யிவ்விதமேயானுக்கா லென்செய்வதென்றேடே 199

எங்குநிறைந்திருக்கு மேகாம்பரப்பொருளே.
தங்குமிடமெனக்குத் தானளித்துத்தாங்குவையே 200

ஓம் தத் ஸத்.

179416
சென்னை 600
R.6